**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.182/2025**
**Sessions :**
**Deposition of Witness for : PW3, LW3**

| | |
|---|---|
| Name | திரு.செல்வம் |
| Father's/Husband Name | திரு.ராமானுஜலு |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 16th day of July, 2026**

(எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

**முதல் விசாரணை:-**

1. நான் 31.05.2025 அன்று நான் செங்கல்பட்டு மதுவிலக்கு அமல் பிரிவில் பணியாற்றி ஒய்வு பெற்று வருகிறேன்.

2. கடந்த 28.03.2025ம் தேதியில் 15.00 மணியளவில் மதுவிலக்கு அமல் பிரிவு மதுராந்தகத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது நான், முதல் நிலை காவலர் தர்மன் 348 மற்றும் திரு.ராஜன் 335 ஆகியோர்கள் பார்ட்டி சகிதம் மதுவிலக்கு வேட்டையாக சூணாம்பேடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில் கண்காணித்து வந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கரும்பாக்கம் கிராமத்தில் உள்ள ஒரு வட்டின் அருகே இருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஜெயக்குமார், வயது 35, த/பெ.கஜபதி, மாரியம்மன் கோயில் தெரு,

கரும்பாக்கம் கிராமம், செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் என்பவரை நாங்கள் மடக்கி பிடித்து அவர் இருந்த இடத்தை சோதனை செய்தபோது சுமார் 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 மண்பானையில் சுமார் 38 லிட்டர் பனங்கள் இருந்தது. எதிரி பனங்கள் இறக்கி விற்பனை செய்ய வைத்திருந்தது தெரியவந்தது. மேற்படி குற்றத்திற்காக எதிரியை 15.15 மணியளவில் கைது செய்தும் கைதின்போது உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றியும் கைது பற்றி உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்பு மேற்படி பனங்கள்ளை 15.30 மணியளவில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். **(அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்பு பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் போலிஸ் பார்ட்டி சகிதம் செய்து எங்கள் முன்னிலையில் பின்பு அன்றைய தினம் 15.45 மணிக்கு அழித்தல் மகசர் மூலம் சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தேன். **(அந்த அழித்தல் மகசர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. காவல் நிலையம் வந்து 17.45 மணிக்கு எதிரி மீது நிலைய குற்ற எண்.145/2025, U/s.4(1)(C) r/w 4(1)(d) TNP Act ல் வழக்கு பதிவு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின் இறுதியாக விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 29.03.2025 ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

4. சம்பவம் நடந்த இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் எத்தனை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் 30 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு நான் சென்றேன் என்றால் சுமார் 4.00

மணிக்கு சென்றேன். எத்தனை பேர் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் 2 பேர் சென்றோம். எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் என்னுடைய வாகனத்தில் சென்றேன். சம்பவ இடத்தில் பொதுஜன சாட்சிகளை யாரையாவது விசாரித்தோமா என்றால் யாரும் முன்வரவில்லை. 32 லிட்டர் பனங்கள்ளை ஆய்வுக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக போட்ட பொய் வழக்குக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவ இடம் சென்றிருந்தால் வரைபடம் தயார் செய்து பொதுஜன சாட்சிகளை சாட்சியாக விசாரித்திருப்பேன் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur